2013 அக்டோபர் 25]

சென்று படிக்க வேண்டிய அவல நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்கூட நான் இதுசம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறேன். எனவே, வரும் கல்வி ஆண்டிலாவது கலசப்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும், மலையிலே இருக்கக்கூடிய பேரேரிப்புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? பழங்குடியின மாணவர்களின் கல்வியை உத்தரவாதப்படுத்துகின்ற வகையிலும், உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அது அமையும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் அதிகமாகக் குடியிருக்கும் பகுதிகளில் அமைந்திருக்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதில் தமிழக அரசு முனைப்புடன் உள்ளது. இதுசம்பந்தமாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தேவைப்படும் இடங்களில் பள்ளிகளைத் தரம் உயர்த்திடத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

புதிய பேருந்துகள்

***19998—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேருந்துப் பணிமனைக்கு புதிய பேருந்துகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பணிமனையிலிருந்து 15 நகர் பேருந்துகள்மூலம் 206 நடைகளும், 11 புறநகர் பேருந்துகள்மூலம் 102 நடைகளும் என 26 பேருந்துகள்மூலம் மொத்தம் 308 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளின் சராசரி வயது 5.5 ஆகும். நடைமுறை விதிகளின்படி பேருந்துகளின் சராசரி வயது ஆறு ஆண்டுகள் அல்லது ஏழு இலட்சம் கிலோ மீட்டர் இயக்கம் ஆகும். இவற்றில் எது முன்னரோ அதன்படி அப்பேருந்து மாற்றம் செய்யப்படும். பேராவூரணி பணிமனைக்கு இரண்டு பேருந்துகளும், பேராவூரணி தொகுதிக்கு ஐந்து புதிய வழித்தடங்களும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.

திரு. செ. அருண் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய அம்மாவுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த வருடம் ஏப்ரல் மாதம் என்னுடைய தொகுதிக்கு ஒரு கலைக் கல்லூரி–i.e. Arts and Science College கொடுத்தார்கள். வெறும் ஆறு மாதங்களில், செப்டம்பர் 13–ல் அதை inaugurate செய்து கொடுத்தார்கள். உண்மையிலேயே என் தொகுதி மக்களின் சார்பாக மிகப் பெரிய நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் Military School–ல் படிக்கும்போது என்னுடைய classmates எல்லாம் North Indians. தற்போது அவர்கள் Ministers and I.A.S., Officers ஆகப் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏப்ரல் மாதத்தில் இந்த அறிவிப்பு செய்தவுடன் அவர்களிடம் சொன்னேன். அதன்பின்னர் ஆறு மாதம் கழித்து என்னுடைய தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வந்ததை அவர்களிடம் சொன்னவுடன், அவர்களால் அதை

2013 அக்டோபர் 25]

நம்பவே முடியவில்லை. They said it is a political miracle. Then I told them she is a miracle Madam. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக 2014–ல் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு டில்லியிலும் இந்த miracle–ஐ நீங்கள் பார்ப்பீர்கள் என்று நான் உறுதியாகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என் தொகுதி மக்கள் இந்த ஆட்சியை நன்றியோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அம்மா அவர்கள்தான்.

நான் இந்தக் கேள்வியை நீண்ட நாட்களுக்கு முன்னர் கேட்டேன். அதற்கு இன்றையதினம்தான் விடை கிடைத்தது. அதைப்பற்றி நினைவூட்டாமல் இருந்துவிட்டேன். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே என் தொகுதிக்கு நிறைய பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். கல்லூரி மட்டுமல்ல, கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் சாலைப் பணிகள் போன்ற நிறைய பணிகளைச் செய்து தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா தொகுதிகளுக்கும் அவர்கள் செய்ய வேண்டும் என்பதால் நான் அதிகமாக ஆசைப்படவில்லை. இப்போது இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் புதிய மாநகரப் பேருந்து பணிமனை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் இருந்தவர்கள் பேருந்துகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப புதிய பணிமனைகள் அமைக்கவேண்டும் என்ற சிந்தனை இல்லாமல்ஐந்து ஆண்டுகளில் அமைக்கப்பட்ட மொத்த பணிமனைகளின்

எண்ணிக்கை 10. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் இயக்கப்படும் அரசுப் பேருந்துகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும், சுத்தம் செய்யப்படவேண்டும், நல்லமுறையில் மக்களுக்கு இயக்கப்பட வேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2 ஆண்டுகளில் மட்டும் 68 போக்குவரத்துக் கழகப் பணிமனைகளை வழங்குவதற்கு உத்தரவிட்டு, அந்தப் பணிமனைகள் அமைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அவர் தொகுதியிலுள்ள பணிமனைக்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உரிய காலத்தில் அந்தப் பணி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அந்தப் பணிமனை துவக்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண்.28, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

28—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***21670—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் தற்போது தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.